பெண்ணின் மிகமுக்கிய கடமைகளுள் ஒன்று குழந்தைகளைப் பராமரித்தல். முந்திய சந்ததியில் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் தாய்மார் தொழிலுக்குப் போகும்போது அவர்கள் குழந்தைகளைத் தாய்வழிப் பாட்டிமாரும், ஓரோரிடத்து தந்தை வழிப் பாட்டிமாரும் கூலிக்காரரும் கண்காணித்து வந்தார்கள். இன்றைய சந்ததியில் பாட்டிமாரும் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பதாலும் கூலிக்காரரை அமர்த்திக் கொள்வது முடியாத காரியமாகிவிட்டபடியாலும் குழந்தைகளை வளர்ப்பதில் பிரச்சினை தோன்றியுள்ளது. எத்தனையோ திறமைமிக்க தாய்மார் தங்குழந்தைகளை வளர்ப்பதற்கு வேறு உதவிகள் இல்லாத காரணத்தால் தம் தொழிலை விட்டு அவலப்படுவதையும் நாம் காணக்கூடியதாயிருக்கிறது.

Energy Carpet Cleaning INC

13 Years Experience in Related Fields

- Carpet Shampoo & Steam Cleaning
- Pressure Washer
- Building Maintenance
- Jaintorial Cleaning
- Strip & Wax
- Emergency Flood Cleaning
- Commercial & Industrial Cleaning
- Truck Mount

முதன் முதலாக தமிழன் ஒருவரால்

- புதிய தொழில்நுட்பத்தின் மூலம் உங்கள் மின்சாரத்தையும் சுடுநீரையும் மிச்சப்படுத்தி, அனைத்து வேலைகளையும் எமது வாகனத்தில் இருந்து செய்கிறோம்,

Kugan : 416 525 4288

Email: energycarpetcleaning@hotmail.com
www.energycarpetcleaning.com

24 Hrs / 7 Days a week

39 Guinevera Road, Markham On. L3S 4V3

ஆகவே, தாயன்புடன் குழந்தைகளைப் பேணிப் பராமரிக்கும் நிலயங்கள் ஆங்காங்கே நிறுவப்படுவது மிக அவசியமாகும். குழந்தைகளின் மனோவளர்ச்சி 1-3 வயதுவரை அதிதீவிர வளர்ச்சி அடைகிறதென்றும் இக்காலகட்டத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் குறை நிறைகள் அவன் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உளவியலாளர் கொள்கை.

தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது நம்நாட்டு மூதுரையல்லவா? மேற்கூறியவற்றிலிருந்து வருங்கால சிற்பிகள் ஆன குழந்தைகள் கண்ணுங்கருத்துமாக வளர்க்கப்படவேண்டியவர்கள், வெறும் உடல் போஷணை மாத்திரம் போதாது, உள்ளமும் செவ்வனே போஷிக்கப்பட வேண்டும். தாயன்புக்கு நிகரான அன்புடன் பிள்ளைகள் பராமரிக்கப்படவேண்டும் என்பவை புலனாகின்றன. இதற்காக ஒழுங்கான முறையில் அறிவும் ஆற்றலும் பயிற்சியும், தாயன்பும் நிறைந்த பெண்களின் தொண்டினால் சமூகத்தினதும் அரசிதனதும் பொருளாதார, தார் மீக ஆதரவுடன் குழந்தைகளைப் பகலிலே பேணிக் காக்கும் பாலர் நிலையங்கள் நிறுவப்படவேண்டும்.

தற்போது வடபகுதியில் யாழ்மாவட்டத்திலேயே நீர்வேலி, குருநகர், கோப்பாய் ஆகிய கிராமங்களில் அரசாங்கத்தின் நன்கொடையுடனும், சமூக சேவையாளரின் உதவியுடனும் பாலர் நிலயங்கள் இயங்கி வருகின்றன. இவற்றிற்கான கட்டடங்கள், தளபாடங்கள் அரசாங்க உதவியுடன் ஏற்படுத்தப் பட்டவையெனினும் மாதாந்த செலவுக்கு அரசாங்கம் வழங்கும்படி வாழ்க்கைச் செலவு அதிகரித்தபின் நிலையத்தைப் பராமரிக்கப்போதாமல் இருப்பதால் சமூகத்தினது ஆதரவை எதிர்பார்த்து இயங்குகின்றன. தென்னிலங்கையில் நாம் அறியக்கூடிய வகையில் மேற்குமாகாணத்தில் விரவிட்டு எண்ணக்கூடிய சில பாலர் பராமரிப்பு நிலையங்கள் உண்டு.

நாட்டில் இன்று பெண்ணாகப் பிறந்தவர்களும் தொழில் பார்க்வேண்டும் என்று பெற்றோரும் கணவனும் சமூகமும் எதிர்பார்க்கிறார்கள். இந்நிலையில் கிராமத்தின் பிரிவுகள் தோறும் பாலர் நிலயங்கள் ஸ்தாபிக்கப்படாவிடடால் தொழில் பார்க்கும் பெண்களின் குழந்தைகள் கவனிப்பாரற்ற நிலையில் மனோவளர்ச்சி, சரீரவளர்ச்சியில் பாதிக்கப்படமாட்டார்களா? நாட்டின் வருங்கால சந்ததியை ஏற்றமுள்ளதாகப் படைத்தாலே நாடு முன்னேறும் நாட்டின் வருங்கால சிற்பிகள் அவர்கள் தாமே. ஆகவே குழந்தைகள் நலனுக்காக பாலர் நிலயங்கள் அமைக்கவேண்டும். கிராமத்துக்கு ஒன்று மாத்திதரம் போதாது கிராமதத்தின் பிரிவுகள் தோறும் அமைதல் வேண்டும். அங்ஙனமாயின் ஆயிரக்கணக்கில் நிறுவவேண்டுமே! கட்டடங்களுக்கும், தளபாடங்களுக்கும் எவ்வளவு இலட்சம் வரைவேண்டும். இன்றைய

INEX
PROPERTY SERVICES

CALL SURESH
416-721-3242
inexservice@yahoo.com

WINTER MAINTENANCE
• Snow Plowing & Salting • Fall Clean-Up
• Spring / Summer Lawn Maintenance



Sakthy
BEAUTY CARE
647.707.8368
647-708-0191

• Dressing of Brides • Facials
• Hair Dressing • Threading • Makeup
• Manicure & Pedicure • Saree Tasseling
• Waxing • Bridal Bouquet Arrangements

Kid'z Corner

Spot the Differences Part 1





Sudoku For Kids

	1		6	8	4	7		9
3	7	9				6	4	8
4		8	3	9	7		2	
1		4	9		5	2		7
8	5		7		3		6	1
6		7	8		1	3		4
	8		4	3	9	5		2
5	4	1				8	9	3
9		3	5	1	8		7	

Puzzle #:1

4		3	1	9	6		5	
	6		2		3	8	4	1
7	1	2		4		6		9
1	3			6	2	9	8	4
		6	5		8	7		
8	2	7	4	1			6	3
6		1		5		4	2	8
2	5	4	9		1		7	
	7		6	2	4	1		5

Puzzle #:2

* See Page 47 for Soulution

JAAL AWARDS
JAAL AWARDS
5 Sun Valley Drive,Richmond Hill.Ontario'L4S 2E5
416-417-6593 / 647-669-6593
"JAAL AWARDS WILL WORK WITH YOUR BUDGET"
Sports Trophies (Soccer, Volley Ball, Cricket, Track & Field, Golf, Badminton Basket Ball, Base Ball and any other Sports), Cup, Custom Make Challenge Trophy and Medals,
- Academy, Music , Dance and Karate Trophies
- Custom make Plaque / Awards
- Cooperate awards (Chrystal, Acrylic, Wood)
various and NEW Design
E-Mail:-Jpatkunasingam@jaalawards.com
E-Mail:- Ibalasundaram@jaalawards.com
Web:-www.jaalawards .com
Reasonable Price,Free dilivery,Fast serive
Metal CUPS AND TROPIES AVAILABE UNDER $140.00

பொருளாதார நெருக்கடியில் அரசினால் இதைச்செய்து முடிப்பது முடியாத காரியம்தான் அப்படியானால் என்ன செய்வது?

பாலர் நிலயங்கள் எப்படி அமைக்கலாம்?

பாலர் நிலயங்கள் பகல் விடுதிகள் மாத்திரமே பாடசாலை நேரத்துக்குச் சற்றுக் கூடுதலான நேரமேபிள்ளைகள் அங்கு தங்கவேண்டியிருக்கிறது. கூடுதலாகத் தொழில்பார்க்கும் பெண்களின் பிள்ளைகளே அங்கு பாதுகாக்க வேண்டியவர்கள் என்ற மூன்று அம்சங்களையும் இணைத்துப் பார்த்தால் பிரச்சினை சுகமாகத் தீர்க்க வழி பிறக்கும். பாலர் விடுதி என்றவுடன் மேல் நாட்டுப் பாணியில் அமைந்த கட்டடங்களும் மேசைகள், கதிரைகள், கந்தோர்கள், சாப்பாட்டு மேசைகள் என்பனவெல்லாம் கண்முன் காட்சியளித்தால் அதுமுடியாததொன்று, அவை அத்தியாவசியமானவை அல்ல என்பதை மனதிற்கொண்டால் அத்தியாவசியமான, வெயில் காற்று மழை என்பவற்றிலிருந்து பாலரைக் காப்பாற்றக்கூடிய ஒரு கட்டடம் கிடைத்துவிட்டால் சமூக சேவையாளரின் உதவியோடு தொடங்கிவிடலாம். தற்போது உள்ளூர் ஆட்சி மன்றங்களின் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு சிறுவர் பாடசாலையை அமைத்து ஒரு ஆசிரியையை நியமித்தால் அவ்வாசிரியைக்கு அரசாங்கம் ரூபா 150/- படியாக வழங்கும் என்னும் செய்தி பாலர் நிலயங்களை அமைக்க எண்ணும் சமூக சேவையாளருக்கும் தெம்பு ஊட்டுவதாகும். இதை விரிவுபடுத்தும் திட்டாக எமது பாலர் பகல் விடுதி நிறுவும் யோசனை இருக்வேண்டும். இதற்குத்தேவையான தாய்மாரின் ஒத்துழைப்பு நிறையக்கிடைக்கும். அவர்களாகவே முன்வந்து தம்குழந்தைகக்குத் தேவையான பாலைப் பொருட்களை இரவலாகவோ, நிரந்தரமாகவோ, பொருளாகவோ கொடுத்துத் தம் பிள்ளைகளளை வசதியாக இருக்க வழிகோலுவர். ஊண்மை யான தேவையிருக்கும் பொழுது எவ்வளவு பிரயாசப்பட்டும் கஷ்டப்பட்டும் தங்குறை தீரப் பாடுபட்டு நிறவ முன்வரும் தொழிலாளத் தாய்மார்கள் அன்றியும் தம் உழைப்பில் ஒரு பகுதியையோ உணவையோ தம் குழந்தைகளுக்கு வழங்கவும் முன்வருவர். சுமூக சேவா சங்கங்களும் பெரியோரும் இதை நெறிப்படுத்தும் பணியில் முன்னின்று உழைத்தால் முடியாதது ஒன்றுமில்லை. ஏளிய வாழ்வும் உயரிய சிந்தையும் எனது கருவூலமாக அமையவேண்டும்.

Generator (Outdoor)
Bale Dance
Circus
Face graph
Bubbles
Fire Works
Sound & Light
Magic Show
(Travis, Barbra Ratnam's)
Snow Ice

Weddings
Receptions
Birthday Parties
Christmas Parties
First Communions
Get Together
Dinner Dance
Stage Programmes
& All other Occasions

Call: Raj
416 -302-7655
dj.raja@hotmail.com

Call DJ Raj. Tel: 416-302-7655

தன் குழந்தையைப் பாலர் நிலயத்தில் சேர்க்கும் தொழிலாளி தன் குழந்தையின் அத்தியாவசியமான ஒரு பாய், தலையணை, குடிகோப்பை, உணவுக்கோப்பை, மாற்றுடுப்பு ஆகியவற்றைக் கொடுத்துவிட்டால் அத்தியாவசிய தேவைகள் பெறப்படும். மிகுதியை சமூகசேவை ஸ்தாபனங்கள், தொழிலாளர், பெரியோர், கிராசபை, கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலயங்கள் ஆகியவற்றின் உதவியோடு சரிக்கட்டலாம். வியாபார ஸ்தாபனங்களும் உற்பத்தி ஸ்தாபனங்களும் பொருட்களை உதவலாம். வைத்திய வசதிகளை அப்பகுதி வைத்தியர்கள் கவனிக்கலாம்.

குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டர்கள் சமூக நலனில் அக்கறை கொண்டவர்களாக இருக்வேண்டும். அவர்களுடைய ஊதியம் தொழிலாளர், சமூக சேவை ஸ்தாபனங்கள், தொழிற்சாலை நிருவாகங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றால் இறுக்கப்படவேண்டும். இவைகள் சுமுகமாக நிறைவேற வேண்டுமானால் தேச பக்திகொண்ட சமூக நலனில் கருத்துள்ள தொண்டர்களை மேற்கூறிய இயக்கங்களில் தொண்டாற்ற மக்கள் வழிகோல வேண்டும்.

"மனமுண்டானால் இடமுண்டு", 'எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்', 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' பாலர் நிலையங்களில் விளையாட்டும், விளையாட்டுப் பொருள்களும் மிக முக்கிய இடம்பெறவேண்டும். பெறுமதியற்ற பொருட்களிலேயே பிள்ளைகளுக்கேற்ற விளையாட்டுப் பொருட்கள் பல தயாரிக்கலாம். மணல், சிரட்டைகள், இலைகள், குரும்பட்டிகள், தடிகள், பால் தகரங்கள் கொண்டு வீடுகள் தேர்கள் தின்பண்டங்கள் திருவிழாக்கள் எல்லாவற்றையுமே ஆக்கிவிடுவார்கள். சிறு பிள்ளைகள் பலர் ஒன்று சேர்ந்துவிட்டால் ஊஞ்சல் இராட்டினம் ஆகியவை அதிக செமலவின்றி ஆக்கக்கூடியவை. செல்வந்தர்கள் தம் பிள்ளைகள் பாவித்துக்கழித்த விளையாட்டுப் பொருட்களை உதவலாம்.

மேற்கூறியவற்றிலிருந்து கிராமங்களின் பிரிவுகளில் உள்ளோருக்கு ஒரு பாலர் நிலையம் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் உன்னிப்பாக உதிக்கவேண்டும். ஆனால் சகல வசதிகளும் படைத்த ஒன்றாக அது இருக்கவேண்டும். மேல் நாட்டுப் பாணி அல்லது கொழும்பில் இருப்பதைப்போல நீர்வேலியில் இருப்பதைப்போல்தான் அமையவேண்டும் என்று நினைத்தால் அது இன்றைய நிலைமையில் கைகூடமுடியாத தொன்றாகப்பட்டுக் கைவிடவேண்டிவரும். ஆகவே கஷ்டப்படும் தொழிலாளிகள் குழந்தைகளின் நிலைய நோக்கி தமது கிராமச் சூழலுக்கேற்ற வகையில் மிக எளிமையானதாக அமைவதற்கு வழி கோலி ஆரம்பிக்கவேண்டும். பின் நாளடைவில் அதன் பயன் உணரப்பட்டுத் தொழிலாளரதும் சமூகத்தினதும் ஆதரவு பெருகி வளர்ச்சியடைந்து முன்கூறிய நிலையங்களைப் போன்று நிறைவுபெற்ற ஒன்றாக மிளிர்ந்து கிராம முன்னேற்றத்துக்கும் தேச முன்னேற்றத்துக்கும் வழிகோலும்.

By: திருமதி. வேதவல்லி கந்தையா


Oneness Presents
PRIMA
DANCE SCHOOL
Conducted By
Ashok Raja & Assistant
Movie Choreographer
Classes Available in
Mississauga & Brampton
Folk, Hip Hop, Jazz, Salsa
& All Cinematic Dances
We also do Performances for
Special Events & Programs
416.642.4899
647.926.9031
416.317.5575
info@primadanceschool.com
2105 Midland Avenue, Unit # 2A
Toronto, ON. M1P 3E3

Spot the Differences Part 2





Sudoku For Kids Solution

2	1	5	6	8	4	7	3	9
3	7	9	1	5	2	6	4	8
4	6	8	3	9	7	1	2	5
1	3	4	9	6	5	2	8	7
8	5	2	7	4	3	9	6	1
6	9	7	8	2	1	3	5	4
7	8	6	4	3	9	5	1	2
5	4	1	2	7	6	8	9	3
9	2	3	5	1	8	4	7	6

Puzzle #:1

4	8	3	1	9	6	2	5	7
5	6	9	2	7	3	8	4	1
7	1	2	8	4	5	6	3	9
1	3	5	7	6	2	9	8	4
9	4	6	5	3	8	7	1	2
8	2	7	4	1	9	5	6	3
6	9	1	3	5	7	4	2	8
2	5	4	9	8	1	3	7	6
3	7	8	6	2	4	1	9	5

Puzzle #:2

Fashion Florist Inc.

Elegant Floral Arrangement for all Funeral Needs

Designed by: Tamil Source

ஃபாஷன் பூக்களஞ்சியம்

Funeral Specialists

உங்கள் வீட்டு இறுதிக் கிரியைகளுக்கு
வேண்டிய மலர் வளையம். மலர்ச்செண்டு மற்றும்
மாலைகள். பூக்கள் அனைத்தையும்
தரம் குன்றாது பெற்றுக் கொள்ள நாடவேண்டிய
இடம் பாபு பூக்களஞ்சியம்

BABU MARKANDU

Tel: 416-754-8282
Unit 5-4400 Sheppard Ave. East,
Scarborough,
ON M1S 5J5
(Brimley & Sheppard)

416-297-0959
A16-80 Nashdene Road
Scarborough,
ON M1V 5E4
(Middlefield & Nashdene)

416-754-8884
6055 Steeles Ave
Unit C114, Scarborough
ON M1X 0A7
(Markham & Steeles)

Web: fashionflorist.ca Email: babuflorist@gmail.com

Neervely Welfare Association - Canada

ANNUAL COMPETITION EXAM -2012

Neervely Welfare Association - Canada

ANNUAL COMPETITION EXAM -2012



Neervely Welfare Association - Canada

ANNUAL COMPETITION EXAM -2012



416 292 0064
markham /sheppard
New Spiceland Video

Duty is ours! Success is Your

ஒன்ராறியோ நுண்கலைக் கூடம்
Ontario Academy of Fine Arts

1ம் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை

அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் நிர்வாகத்தில்

ஒன்ராறியோ பாடத்திட்டத்திற்கமைய தராதரம் பெற்ற ஆசிரியர்களினால் கலையுடன் கல்வியும் இணைத்து நடாத்தப்படுகின்றது.

1ம் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை



Ontario Academy of Fine Arts

- Vocal
- Veena
- Flute
- Violin
- Ghatam
- Mrudhangam
- Tabla
- Bharathanatyam
- Keyboarding
- Piano
- Guitar
- Drum

Ontario Academy of Science

- Math
- Science
- English(E.S.L)
- English(Regular)
- Physics
- Biology
- Chemistry
- Accounting

Summer Camp
Full Time
July - August
Grade 1 Grade 8

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
சங்கர் அல்லது மோகன்

FOR MORE INFO, PLEASE CALL 416-609-8314 / 647-403-8314
880 ELLESMERE ROAD, #203B, SCARBOROUGH, ON. M1P 2W6
WWW.OAFA96.COM E-MAIL: oafa96@gmail.com

Neervely Welfare Association - Canada
Annual Competition Exam – 2012
Results

Competition-Math

Grade 1:
- 1st Baanujan Kiritharan
- 2nd Harsana Yogarajan
- 3rd Sulakshana. K

Grade 2:
- 1st Rasana Yogarajan
- 2nd Athesa Nanthakumaran
- 3rd Biramilan Sivanathan

Grade 3:
- 1st Karthik Balachandran
- 2nd Majuri Pirabaharan

Grade 4:
- 1st Sahanah Kugathasan
- 2nd Kajeevan Sivathasan
- 3rd Thaamera Nimalraj

Grade 5:
- 1st Luxa Nanthakumar
- 2nd Mahishan Kugathasan
- 3rd Thanusan Uthayakumaran

Grade 6:
- 1st Kiyasan Nanthakumar
- 2nd Sajan Pirabaharan

Grade 7:
- 1st Saajiivan Sivathasan
- 2nd Nirujan Gnanendran
- 3rd Tharani Uthayakumaran

Grade 8:
- 1st Kishore Sriskantharuban

Competition-Tamil

Grade 1:
- 1st Baanujan Kiritharan

Grade 2&3 :
- 1st Athesa Nanthakumar
- 2nd Karthik Balachandran
- 3rd Shritha Srilingam

Grade 4&5:
- 1st Luxa Nanthakumar
- 2nd Thaamera Nimalraj
- 3rd Kajeevan Sivathasan

Grade 6&7:
- 1st Kiyasan Nanthakumar
- 2nd Saajiivan Sivathasan
- 3rd Neerja Sritharan

Competition-Spelling Bee

Primary Division:
- 1st Biramilan Sivanathan
- 2nd Baanujan Kiritharan
- 3rd Karthik Balachandran

Junior Division:
- 1st Kiyasan Nanthakumar
- 2nd Sajan Pirabaharan
- 3rd Luxa Nanthakumar

Intermediate Division:
- 1st Saajiivan Sivathasan
- 2nd Kishore Sriskantharuban
- 3rd Tharani Uthayakumaran

K.K.CATERING

தரமான அறுசுவை உணவுகள்

You are about to taste a vast selection of authentic Sri Lankan cuisine, the way it's meantto be cooked with a variety of herbs and spices unique to Sri Lanka.

Tasty Sri Lankan & Indian Dishes for all your functions

PLEASE CONTACT PAUL

TEL: 416-287-3398 CELL: 647-891-9184

சுவாரஸ்யமான சில தகவல்கள்

- பின்புறமாக மரம் ஏறும் விலங்கு - கரடி.
- நாக்கு இல்லாத விலங்கு - முதலை.
- பின்நோக்கி நடக்க முடியாத விலங்கு - கங்காரு
- மனிதனைப் போன்று கையில் ரேகை அடையாளம் உடைய ஒரே விலங்கினம் - கோலாக்கரடிகள்.
- மனித மூளையில் உள்ள நீர் – 85
- உலகிலேயே நீண்ட கடற்கரையுள்ள நாடு - அவுஸ்ரேலியா
- தலையில்லாமல் ஏழு நாட்களுக்கு மேல் உயிர் வாழும் பூச்சி - கரப்பான் பூச்சி
- வாழ்நாளில் ஒரேயொருமுறை முட்டையிடும் பறவை - பென்குயின்.
- காலில் காதுள்ள பிராணி - வெட்டுக்கிளி.
- உடல் வியர்க்கவே வியர்க்காத பிராணி - ஒட்டகம்
- உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் உள்ளது - பிலிப்பைன்ஸ் நாட்டில்.

இலங்கையின் புகழ் பெற்ற பெயர்கள் எவை?

தப்ரேன்
மும்முடிச்சோழ மண்டலம்
இரத்தினத்துவீபம்
சொர்க்கதீவு
தம்பபன்னி
நித்திலத்தீவு
ஆதாம சிகரநாடு

ஆக்கம் - வ. யதுர்சனா
தரம் - 5
யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை

Remedy'sRx Arogya Pharmacy

5200 FINCH AVE EAST #111, SCARBOROUGH, M1S 4Z4

Remedy'sRx ஆரோக்யா பார்மசி

FINCH & MIDDLEFIELD சந்திப்பில்

Tel: 416. 840. 0007 Fax: 416.840.0008

**"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

- என்பது திருக்குறள்

தமிழர் மத்தியில் தமிழ் மருந்தாளரின் புதிய மருந்தகம்: Remedy'sRx ஆரோக்யா பார்மசி

- நீங்கள் உபயோகிக்கும் மருந்துகள், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும், உங்கள் ஆரோக்கியம் சம்பந்தமான விபரங்கள் பற்றியும்,தெளிவான விளக்கங்களை என்னுடன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கலந்துரையாடிப் பெற்றுக்கொள்ளலாம்.
- முதியோர் மற்றும் சமூகநல உதவியில் இருப்போரிடமிருந்து $ 2.00 அறவிடப்படமாட்டாது
- வயோதிபர்கள் மற்றும் உதவியற்றவர்கள் தாமே உபயோகிக்கும் வகையில் மருந்துகளை "COMPLIANCE or BLISTER PACKGING"செய்து கொடுக்கப்படும்.
- தங்களுக்குத் தேவையாயின் இலவச விநியோகமும் செய்து தருவோம்.
- மருந்தகத்தில் இரத்த அழுத்தம் சரிபார்க்கும் கருவியையும் இலவசமாக உபயோகிக்கலாம். (FREE BLOOD PRESSURE MONITOING)
- GLUCOMETER STRIPS வாங்கினால், GLUCOMETER இலவசமாக தருவோம். அத்துடன் உபயோகிக்கும் விதத்தினையும் தெளிவாக விளக்கிக் கூறுவோம்.
- மருந்துச் சீட்டின்றி பெற்றுக்கொள்ளக் கூடிய மருந்துகளை என்னுடன் தமிழில் கலந்தாலோசித்துப் பெற்றுக் கொள்ளலாம்..
- மருந்தக நேரம் முழுவதும் தமிழ் மருந்தாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்:

வெ. கார்த்திகேயன் (கார்த்திக்)
மருந்தாளர்
(Pharmacist / Owner)
416-840-0007

விரைவான சேவை! நிறைவான சேவை!! தரமான சேவை!!!

உங்கள் ஆரோக்கியமே எங்கள் நோக்கம்

கற்றல் நடத்தையினை மேம்படுத்தும் ஊக்கமூட்டி நுட்பங்கள்

Author: Menaka Sivakaran
Lecturer in Psychology at University of Jaffna

கல்விக்குப் பெயர் போன யாழ்ப்பாணம் இன்று அதன் கற்றல் அடைவுகள் முன்னைய காலங்களினை விட வீழ்ச்சியடைந்திருப்பதாகவே அனேக புள்ளிவிபரங்களும் சுட்டி நிற்கின்றன. ஏன் இந்த நிலைமை? பல்வேறுபட்ட காரணிகளும் இந்நிலைமைக்குச் செல்வாக்குச் செலுத்தியிருந்தாலும் மாணவர்களின் கற்றல் நடத்தை அக் காரணிகளினால் மாற்றமடைந்துள்ளது என்பது தான் உண்மை. ஆகவே இங்குள்ள மாணவர்களின் கற்றல் நடத்தயினை மேம்படுத்த நாம் அனைவரும் தலைப்பட்டுள்ளோம். இதற்கு ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் பங்களிப்பு மிக இன்றியமையாதது. எனவே மாணவர்களின் கற்றல் நடத்தயினை மேம்படுத்த சிறந்த வழி மாணவர்களினை கற்றல் செயற்பாட்டினை நோக்கி ஊக்கிவிப்பதேயாகும். மனிதநடத்தைக்குக் காரணமாக உள்ள உள்ளார்ந்த ஏதுக்களினை ஊக்கி என்று கொள்ளுகின்றனர். இது இலக்கு அல்லது தேவையை நோக்கிய உந்தப்பட்ட நிலை. அதாவது இலக்கு அல்லது தேவையினை நோக்கிச் செயற்பட சக்தி பெறப்பட்ட நிலை. இவ்வாறாக கற்றல் நடத்தையினை மேம்படுத்த நாம் சக்தியினை வழங்குவோம் எனில் எமது மாணவர்கள் தாங்களாகவே கற்றலில் ஆர்வம் கொண்டு சிறந்த அடைவுகளினைப் பெறுவர் என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை. எனவே மாணவர்களின் கற்றல் நடத்தையினை மேம்படுத்தும் ஊக்கமூட்டி நுட்பங்கள் தொடர்பாக இப்பகுதியில் நோக்கலாம். ஊக்கி என்பது மனித நடத்தைக்குக் காரணமாக உள்ள ஏதுக்கள் என்று நாம் ஏலவே பார்த்திருந்தோம். ஊக்கமூட்டி நுட்பங்கள் என்பது அவ் அம்சங்களினை சக்தி மயப்படுத்த மேற்கொள்ளப்படும் வழிவகைகள் ஆகும். கற்றல் என்பது அறிவு, திறன், மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்துவது. எனவே இத்தகைய மாற்றங்களினை மாணவர்களில் ஏற்படுத்தி மாணவர்களின் கற்றல் நடத்தையினை மேம்படுத்த பின்வரும் ஊக்கமூட்டி நுட்பங்களினைப் பயன்படுத்தலாம். இவற்றினை விரிவாக நோக்குவோம்.

1. மாணவர்களுக்கு கற்றல் சார்பான விடயங்களினை யதார்த்த பூர்வமாக வழங்கல்

மாணவர்களிற்கு வழங்கப்படும் கற்றல் விடயங்கள் அவர்களின் வாழ்வியலோடு தொடர்புடையதாக தொடர்புபடுத்தி வழங்கப்பட வேண்டும். அது மட்டுமின்றி மாணவர்களின் சமூக கலாச்சாரங்கள், சமூக விழுமியங்களுடன் தொடர்புபடுத்தி அவ்விடயங்களினைப் பிரயோகிக்க வாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டும். (Brozo 2005)

கற்றல் விடயங்களினைத் தெளிவுபடுத்தும் கற்பித்தல் நுட்பங்களும் மாணவர்களிற்கு ஆர்வம் தரும் வகையில் யதார்த்தமாக இருக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் மிக அதிக்கமாகத் திகழும் தொழில் நுட்பங்களினைப் பயன்படுத்தி அந்நுட்பங்கள் அமைந்தால் மேரும் சிறப்புக்குரியது. (YouTube videos, Cell Phones, Tablets.....etc.)

2. கற்றல் விடயங்களில் மாணவர்கள் தாங்கள் விரும்பியவற்றினைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கல்

மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகள் தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள போது அதாவது தாமகவே தெரிவு செய்துகொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போது அதிகமாகக் கற்க உந்துகின்றனர். எனவே மாணவர்களின் பாடத் தெரிவுக்கு வெவ்வேறுபட்ட தெரிவு அம்சங்களினை கொடுத்து மாணவனாகவே தெரிவு செய்யுமாறு விட்டு விட வேண்டும். மாணவன் தன்னால் தெரிவு செய்யும் பாடங்களில் ஆர்வமுடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபடுவான். மாணவர்களின் பாடங்களுக்கு மட்டுமின்றி சில மதிப்பீட்டுச் செயன்முறைகளினைக் கூட விரும்பியவற்றினுள் ஒன்றினைத் தெரிவுசெய்யமாறு வழங்க வேண்டும். (Reeve and Hyungshim, 2006).

3. மாணவர்கள் தாம் விரும்பிய கற்றல் நடத்தையினை மேம்படுத்த உதவும் மாதிரிகளினை பின்பற்றத் தூண்டல்

சமூகக் கற்றல் கொள்கையின் பிரகாரம் கற்றலானது பின்பற்றலினால் நடைபெறுகின்றது. எனவே மாணவர்கள் தமக்கு விரும்பிய மாதிரிகளினை அடையாளம் கண்டு அவற்றினைப் பின்பற்றுகின்ற போது கற்றல் நடத்தை ஊக்குவிக்கப்படலாம். ஆனால் மாணவர்கள் தமக்கான மாதிரிகளினைப் தெரிவு செய்கின்ற போது பெற்றோர்கள், ஆசிரியர்கள் அது குறித்து அவதானமாக இருக்க வேண்டும். கல்வியில் சிறந்து விளங்குவதுடன் நற்பண்புகள் நிறைந்த மாதிரியினை மாணவர்கள் தெரிவு செய்யத்தூண்டுகின்ற போது சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ளலாம்.(Weinsetal, 2003) இவர்களின் ஆய்வு பெண் மாணவர்கள் பெரும்பாலும் தமது ஆசிரியர்களினை மாதிரிகளாகக் கொள்ள முற்படுகின்றார்கள் என்று கூறுகின்றது. எனவே ஆசியர்கள் சிறப்பான பண்புக் கூறுகள் உள்ளவராகவும் ஆற்றல் உள்ளவராகவும் திகழ வேண்டும்.

இவ்வாறாக மாணவர்களினால் தெரிவு செய்யப்படுகின்ற மாதிரிகள் இவர்களது சக பாடிகளாக இருக்கும் போது அவையும் ஓர் மாணவனின் கற்றல் நடத்தயினைத் தூண்டும் என அய்வுகள் கூறுகின்றன. (Margoils and Mccabe, 2006).

4. வெகுமதிகள் வழங்கல்

மாணவர்கள் கற்றல் தொடர்பான நடத்தையில் நேரான தன்மையினைக் காட்டுகின்ற போது இவர்களிற்குக் கொடுக்கப்படுகின்ற வெகுமதிகள் அதாவது பரிசுகள், பாராட்டு, புகழ் என்பன அவர்களின் கற்றல் நடத்தயினை மேலும் மேம்படுத்த ஓர் சக்தி வாய்ந்த ஊக்கியாகத் தொழிற்படுகின்றது. பரிசளிப்பு விழா நடாத்துதல், பலர் முன்னிலையில் மாணவரினைப் பாராட்டுதல், மாணவர்கள் கற்றல் சார்பான விடயங்களில் ஆர்வமாய் உள்ள போது தட்டிக்கொடுத்தல், கேட்கப்படும் வினாக்களிற்கு விடயளிக்கப்படும் மாணவனை "கெட்டிக்காரன்" என்ற வார்த்தைப் பிரயோகம் மூலம் பாராட்டுதல், கேடயம் வழங்கல், சான்றிதழ் வழங்கல், பதக்கம் வழங்கல் என்பன சிறந்த வெகுமதிகளாகக் கொள்ளப்படுகின்றன. இவை காலந்தாழ்த்தாது நியம முறையில் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாணரின் அடைவின் பின் காலந் தாழ்த்தி வழங்கப்படும் வெகுமதிகளினால் எந்தவித பயனும் கிட்டுவதில்லை என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

5. வகுப்பறைச் செயற்பாடுகளில் மாணவர்களினைப் பங்குபெறச் செய்தல்

மாணவர்களிடம் சிறிய சிறிய பெறுப்புக்களினைக் கொடுத்து அவற்றினை நிறைவேற்றச் செய்வதுடன் புதிய விடயங்களினைப் புகுத்துகின்ற போது அவை தொடர்பாக மாணவர்களிடம் கலந்துரையாட வேண்டும். குழுச் செயற்பாடாகவோ அல்லது தனித்த முறையிலோ மாணவர்கள் கற்றுக் கொண்ட விடயங்களினை பிரயோகிக்கச் சந்தர்ப்பம் வழங்குகின்ற போது அவர்களின் கற்றல் நடத்தை உயர்கின்றது.

6. மாணவர்களின் தேவைகளினைப் பூர்த்தி செய்தல்

மாணவர்களினை சந்தோசமாகவும் ஆர்வமாகவும் அர்ப்பணிப்படன் செயற்படுத்த அவர்களின் தேவையினைப் பூர்த்தி செய்தலானது மிக முக்கியமான உந்துசக்தியாகும். மாணவர்களின் தனிப்பட்ட வாழ்வில், வகுப்பறையில் பல்வேறுபட்ட தேவைகள் காணப்படுகின்றன.

இவற்றினை இணம்கண்டு தீர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். மாணவர்களிடம் பொதுவாக அன்புக்கான தேவை, உயிர்வாழ்வதற்கான தேவை, நகைச்சுவைக்கான தேவை, பாராட்டல் தேவை போன்ற அடிப்படையான தேவைகள் காணப்படலாம். இவற்றினைச் சரியான முறையில் திருப்தி செய்வதன் மூலம் மாணவர் கற்றலில் முழுமையாக ஈடுபடச் செய்யலாம்.

7. ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகளினை கவர்ச்சிகரமானதாக்கல்

ஆசிரியர்கள் மாணவர்களின் கற்பித்தல் விடயங்களினை ஏலவே திட்டமிட்டு மாணவர்களின் அடிப்படை அறிவினை இணம் கண்டு அவற்றிலிருந்து புதிதாக கற்பிக்கும் விடயங்களினை திட்டமிட வேண்டும். முறையான பாடத் திட்டமிடல் மாணவர்களினை ஈர்க்கப் பயன்படும். புதிய பாடங்களினை அறிமுகப்படுத்துகின்ற போது மாணவர்களிற்கு அவற்றின் நோக்கம், அதனைக் கற்பதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாகத் தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். எல்லா மாணவர்களையும் சமமாக மதித்து நடாத்த வேண்டும். ஆசிரியர் சிறந்த நற்பண்பு உடையவராகவும், அன்பானவராகவும், சிறந்த கற்பித்தல் திறன் உடையவராகவும், மாணவர்களினைத் தட்டிக் கொடுப்பவராகவும், மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளினைக் கவனத்தில் எடுப்பவராகவும் உள்ள போது மாணவர்கள் குறித்த ஆசிரியரினால் ஈர்க்கப்படுவர். கற்றல் செயற்பாடுகளிலும் ஆர்வமாகப் பங்குகொள்வர்.

8. கற்றல் சூழலினை சௌகரியமானதாக மாற்றல்

மாணவர்களின் கற்றல் சூழலினை மாணவர்களின் மனதிற்குப் பிடித்தமானதாகவும், ரம்மியமானதாகவும், சௌகரியமானதாகவும், போதிய வள வசதிகள் கொண்டதாகவும், எதுவித இடையூறுகள் அற்றதாகவும் அமைத்துக் கொள்ளுகின்ற போது இவர்களது கற்றல் நடத்தை உயரும்.

எனவே இவ்வாறான ஊக்கமூட்டி நுட்பங்களினை பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பயன்படுத்துகின்ற போது தனிப்பட்ட கற்றல் அடைவுகளினை மேம்படுத்தக் கூடியதாக உள்ளதுடன் யாழ்பாணத்தின் கற்றல் அடைவுகளினையும் எதிர்வரும் காலங்களில் உயர்த்த முடியும் என்பது திண்ணம்.

Author: Menaka Sivakaran
Lecturer at University of Jaffna

5 STAR FLOORING KITCHEN & BATH

- ***HARDWOOD***
- ***LAMINATING***
- ***TILES***
- ***STAIRS***
- ***KITCHEN***
- ***WASHROOM***
- ***VANITY***
- ***AND MUCH MORE***

Please call us at any time and We would be happy to arrange for a FREE no obligation quote for Hardwood Floors or Kitchen & bath.

Sutha: (416) 418-3485 or Ram: (416) 616-9181

உலகமயமாக்கல்

செல்வி. சுபாஜினி நவரட்ணம்

யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி

உலகமயமாக்கல் என்பது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயன்முறையாகும். அது பொருளாதார, தொழில்நுட்ப, கலாசார மற்றும் அரசியல் பிணைப்புகளுக்கூடாக உலக மக்களை மிக அருகில் எடுத்து வருவதுடன், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. மிக மிக்கியமானதாக இருந்து வரும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, உலகமயமாக்கல் என்பது அனைத்து நாடுகளினதும் வளர்ந்து வரும் பொருளாதர ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. தேசிய சந்தைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிலான அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம் மற்றும் பணம் என்பவற்றின் அசைவுகளுக்கூடாகவும் தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கூடாகவும் இது இடம்பெற்றுக் கொள்வதற்காகவும், செலவு அனுகூலம் மற்றும் உயர் இலாபம் என்பவற்றை கருத்திற்கொண்டு பொருளாதர நடவடிக்கைகள் தேசிய எல்லைகளைத் தாண்டி வியாபித்துச் செல்லும் பொழுது பண்ட வர்த்தகம் மற்றும் முதலீடு என்பன சர்வதேசமயமாக்கப்படுகின்றன.

அரசியல் அடிப்படையில் நோக்கும் பொழுது உலகமயமாக்கல் என்பது ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள், பால், சமத்துவம், ஒளிவு மறைவற்ற ஆட்சி மற்றும் அரசு சாரா அமைப்புக்கள் என்பவற்றின் பெருக்கம் என்ற வகையிலேயே கருதப்பட்டு வருகின்றது. இது தவிர உலகமயமாக்கல் செயன்முறை ஒரு சமூகவியல் ரீதியான பரிமாணத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது உலக மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதும் பொப் இசை, ஹொலிவூட் படங்கள், நீலநிறக் காற்சட்டைகள், திடீர் உணவகங்கள் மற்றும் நவீன வாழ்க்கை மோஸ்தர்கள் என்பவற்றின் பரவலாகவும் அது நோக்கப்படுகின்றது. பொதுவாகக் கூறுவதனால் உலக மயமாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளிலிருந்தே தோன்றி வருகின்றது.

மேலும் வளர்முக நாடுகளை தம்மால் வடிவமைக்கப்படும் உலகளாவிய அமைப்புக்கள் உள்வாங்கிக் கொள்வதே இச்சக்திகளின் நோக்கம் ஆகும். இது அனேகமாக மேலைய நாடுகளின் மூலதனம், தொழில்நுட்பம், கலாசாரம், எண்ணப்போக்குகள் மற்றும் வாழ்ககைப் பாணிகள் என்பவற்றை வளர்முக நாடுகளுக்குள் ஊடுருவச் செய்கின்றன. இந்த வகையில் இது உலக நாடுகளின் பொருளாதார, கலாசார, அரசியல் மற்றும் சித்தாந்த கொள்கைகளை ஒருமுகப்படுத்தும் ஒரு செயன்முறையாகவே தென்படுகின்றது.

மறுபுறத்தில் உலகமயமாக்கல் என்பது தொழில்நுட்பத்திற்கு ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தின் காரணமாக காலம், இடம் மற்றும் தேசிய எல்லைகள் என்பவற்றை சுருக்கியும் இல்லாமல் செய்தும் வருகின்றது. இணையம், இடம்பெயர் தொலைபேசி, தொலைநகல் பொறி முதலிய புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் மலிவானவையாகவும் உயர் வேகத்திறன் கொண்டவையாகவும் பரந்த ஆட்புலத்தை உள்ளடக்கக் கூடியவகையாகவும் உருவாகி வருகின்றன. அவை நிதிச் சந்தைகளின் ஒருங்கிணைப்பினையும் பல தேசிய நிறுவனங்களின் பரவலையும் மக்களிடையே தகவல் மற்றும் கருத்துக்கள் என்பவற்றின் பரிமாற்றத்தினையும் வியப்பூட்டும் வகையில் துரிதப்படுத்தியுள்ளன.

நாங்கள் இன்று வாழ்ந்து வரும் உலகம் பயங்கரமான போர்கள், வன்செயல்கள் மற்றும் குற்றச்செயல்கள் என்பவற்றினாலும் பெருகி வரும் அரசியல் கொந்தளிப்புக்களினாலும் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டுக் காணப்படுகிறது. 21ஆம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தில் சமாதானம், செல்வச்செழிப்பு மற்றும் சுகவாழ்வு என்பவற்றிற்கானஎதிர்பார்ப்புக்களை குழப்பங்கள் மலிந்த அரசியல், பொருளாதார சமூகஒழுங்கு களங்கப்படுத்திக்கொண்டிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் மேலைய அதிகார வர்க்கம் அதன் மும்மூர்த்திகளான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலகமயமாக்கல் என்று அழைக்கப்படும் சிக்கலான சர்ச்சைக்குரிய செயன்முறையை முன்னெடுத்துச்செல்கின்றது.

மேலைய உலகின் ஊடாக வலையமைப்புக்களும் கைத்தொழில் உலகின் குறுகிய அக்கறைக் குழுக்களும் எமது உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் துர்ப்பாக்கியங்களுக்குமான சர்வரோக நிவாரணியாக உலகமயமாக்கலைச் சிபார்சு செய்து வருவதுடன் அதற்கூடாக சகல மக்களுக்கும் புதிய வாய்ப்புக்களும் புதிய தெரிவுகளும் கிடைக்க முடியும் என வாக்குறுதி தருகின்றது. ஆனால், மூன்றாவது மண்டல நாடுகளின் பல கோடிக்கணக்கான மக்கள் வறுமை, வேலயில்லாத் திண்டாட்டம் மற்றும் போஷாக்கின்மை என்பவற்றின் பிடியில் சிக்கித் திணறி வருவதனை அவர்கள் எளிதில் மறந்து விடுகின்றனர்.

உலகமயமாக்கல் செயன்முறையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும், அதனை சரியான வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து நோக்குவதற்கும் இதன் வேர்களை நாங்கள் கண்டறிவது அவசியம். நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒருங்கிணைப்புச் செயன்முறை 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் உருவாகியதுடன் 1870 - 1913 காலப்பிரிவின் போது உலகப் பொருளாதாரத்தில் முன் எப்பொழுதும் இருந்திராத அளவிலான பெருமாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலப் பிரிவின் போது பல நாடுகள் உலகமயமாக்கலின் அடிப்படைக் குணாம்சமான உணர் அளவிலான திறந்த தன்மையைக் காட்டின. பொருட்கள், மூலதனம் என்பவற்றின் அசைவு தொடர்பாக நிலவி வந்த பெருந்தொகையானகட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதுடன்,பொருளாதார நடவடிக்கையிலான அரசாங்கத்தின் தலையீடு குறைந்த பட்ச மட்டத்தில் வைக்கப்பட்டிருந்தது.

ஊலக வங்கி சர்வதேச நாணய நிதிய அனுசரணையிடனான அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் 1980களிலும் 1990களிலும் உலகமயமாக்கல் செயன்முறையை மேலும் தீவிரப்படுத்தின. பிறிதொரு முனையில் முன் எப்பொழுதும் இருந்திராத விதத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப தாக்கங்கள், போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் என்பவற்றில் செலவுகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சிகளுடன் இணைந்த விதத்தில் உலகமயமாக்கல் செயன்முறையை மேலும் தீவிரப்படுத்தின.

இன்றைய நிலையில் முழு உலகமும் ஒரு பூகோள கிராமமாக சுருங்கி வரும் ஒரு பின்புலத்தில் உலகளாவிய ரீதியில் பொருளாதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலை வரவர அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் பேரளவிலான அரசியல் மற்றும் பொருளாதார சக்தியை தம்வசம் கொண்டிருக்கும் ஐரோப்பா, சீனா, ஜப்பான், ருஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய வல்லரசுகள் உருவாகியுள்ளன.

1990களின் போது உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றங்கள், தகவல் தொழில்நுட்ப புரட்சி போன்ற பெருமாற்றங்கள் உலகப் பொருளாதாரம் படிப்படியாக ஒருங்கிணைவதற்கான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்தன. 1990களின் நடுப்பகுதியின் போது வளர்முக நாடுகள் அனைத்துமே உலக வர்த்தக நிறுவனத்தில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டதுடன் வர்த்தக தாராளமயமாக்கலுக்கான கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டன.

எவ்வாறிருப்பினும் உலகமயமாக்கலின் அனுகூலங்கள் நாடுகளுக்கு இடையிலான சமமான முறையில் பகிரப்பட்டிருக்கவில்லை என்பதனை ஐ.நா. அபிவிருத்தி திட்டங்கள் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன. உலகமயமாக்கலின் விரிவாக்கத்துடன் இணைந்த விதத்தில் சமூக, அரசியல், கொந்தளிப்புக்கள் தோன்ற முடியும் என்பதனை அண்மையில் சீட்டில் நகரத்திலும் பல மூன்றாவது உலக நாடுகளிலும் இடம் பெற்ற எதிரிப்பு ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலம வர்த்தகம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் உலகமயமாக்கலை ஆதரித்து பேசி வந்த போதிலும் வறிய உலகம் எதிர் கொண்டிருக்கும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போசாக்கின்மை மற்றும் தொழில்நுட்ப பின்னடைவு போன்ற பல பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமலேயே இருந்து வருகின்றது.

மற்றும் கல்வி, தொழில்நுட்பம், ஆரய்ச்சி, பயிற்சி, நிதி, வங்கித் தொழில், காப்புறுதி மற்றும் போக்குவரத்து போன்ற வளங்கள் அனைத்தும் வளர்ச்சியடைந்துள்ள கைத்தொழில் நாடுகளிலேயே ஒன்று திரண்டுள்ளன. இந்த நிலையில் வளர்முக உலகம் எதிர்காலத்தில் மாற்றம் மற்றும் செல்வச் செழிப்பு என்பவற்றை சாதித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே தென்படுகின்றன.

உலகமயக்கலை முனைப்புடன் ஆதரித்துப் பேசி வருபவர்கள் வறிய நாடுகள் தொடர்பாக அவர்கள் முன்வைத்து வரும் அபிலாசையுடன் கூடிய இலக்குகள் சாதித்திக் கொள்ளப்படுவதனை உறுதி செய்தாலே ஒழிய இன்றைய இருண்ட யதார்த்த நிலைமைகள் இன்னும் பல வருடங்களுக்கு அவ்வாறே தொடர்ந்து நீடித்து வரக் கூடும்.

செல்வி. சுபாஜினி நவரட்ணம்
யா/ அத்தியார் இந்துக்கல்லூரி
நீர்வேலி

P.KAYILASANATHAN

B.A (cey) LL.B (Cey)

Barrister & Solicitor

- **Criminal**
- **Real Estate**
- **Business Law**
- **Family law**

2401 Eglinton Avenue East, Suite 302
Scarborough, ON. M1K 2M5
Tel: (416) 752-9561
Fax: (416) 752-7262

தாயன்பு

இந்த மண்ணுலகிலே நாம் கண் முன் காண்கின்ற கடவுளாகத் தாய் விளங்குகிறாள். கடவுள் தான் எங்கும் இருக்க முடியாது என்பதற்காகவே தாயைப் படைத்தார். தாயின் அன்புக்கும்; அரவணைப்புக்கும் ஈடாக உலகில் எதுவும் இல்லை.

தாயின் அன்பை வெளியிட உலகில் உள்ள எந்த மொழியிலும் வாரத்தையில்லை. "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை, தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை", "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனி சிறந்தனவே" இந்தப் பொன் மெ-ாழிகள் தாய்மையின் உயர்வை எமக்குத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

தன்பிள்ளை சான்றோன் என்ற பெயரைப் பிறர் கூறுவதைக் கேட்கவே தாயானவள் விரும்புகிறாள். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவர் வாய் மொழி மூலம் இதனை நன்கறியலாம். எமக்கு நோய் வரும் போது அருகிருந்து தன் மெய்வருத்தம் பாராது எம்மைக் காப்பவர் எம் தாய். "அம்மாவை வணங்காத உயிரில்லையே அம்மாவை வணங்காது உயர்விலலையே" என்று பாடினார் கவிஞர் ஒருவர். தாய் எம்மீது வைத்திருக்கும் அன்பு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது.

வாழ்நாள் முழுவதும் எம் நலனுக்காகப் பாடுபடுபவள் எம் தாய். தாயும் தந்தையும் கண்கண்ட தெய்வங்கள். நாம் எம் தாய் சொற்படி நடப்பது அவசியம். "ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்க முடியுமா" என்ற சினிமாப் பாடலும் தாயின் மேன்மையை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. எம்மைப் பத்துமாதம் சுமந்து பாலூட்டிச் சீராட்டி வளர்த்தெடுப்பதற்கு தாய் படும் துன்பங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. எமக்கு நோய் கண்டபோது துடியாய்த் துடிப்பவள் அன்னை. இவ்வுலகில் அன்னைக்கு ஈடாக எதுவும் இலலை. எமது கண்கண்ட தெய்வமாகிய தாயைப் போற்றி அவள் சொற்படி நடந்து அன்புடன் வாழ்ந்து வாழ்நாளில் உயர்வோ-மாக.

செல்வி. ம. கலைநிலா
தரம் - 5
யா நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை


OLI ARUVI
PROFESSIONAL VIDEO & PHOTO
OLI ARUVI
PROFESSIONAL VIDEO & PHOTO
Vijay 647 701 2588
Siva 647 854 7227
416 627 0678

விஞ்ஞான யுகத்தில் கணனியின் பங்கு

By: செல்வி. பவிதா நடனபாதம்
யா/ அத்தியார் இந்துக்கல்லூரி
நீர்வேலி

மனிதன் கல்லாயுத யுகம் தொட்டு பல்வேறு யுகங்களை தாண்டி பயணம் செய்த போது தகவல்களின் தேவை படிப்படியாக அதிகரித்தது. தீர்மானங்களை மேற்கொள்ளல், திட்டமிடல், எதிர்வுகூறல் ஆகிய பல்வேறு தேவைகளுக்காக தகவல்கள் அவசியமாகின்றன. தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இயந்திரங்களை உருவாக்குவதற்கு பண்டைக் காலம் முதல் மனிதன் முயற்சி செய்து வருகின்றான். இன்றைய தகவல் யுகத்தில் தகவல்களைப் பெறுதல், சேமித்தல், கையாளுதல், தொடர்பாடுதல், பிரயோகித்தல், முகாமைத்துவம் செய்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு தொழினுட்பம் அவசியமாகின்றது. இவ்வாறான அனைத்து தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட தொழினுட்பமானது தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் எனப்படுகின்றது.

தற்போது கணனி எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படும் பொதுவான ஒரு உபகரணமாகக் காணப்படுகின்றது. கணனியுடன் தொடர்பான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் மிகவும் இன்றியமையாத அம்சமாக விளங்குகின்றது. அத்துடன் பல்வேறு துறைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தின் பயன்பாடு காணப்படுகின்றது. கல்வி, கணக்கியலும் வர்த்தகமும், மருத்துவத்துறை, பொறியியல், போக்குவரத்து, பாதுகாப்பு, பொழுதுபோக்கு, தொடர்பாடல் சுகாதாரம் ஆகிய துறைகளுக்கு தகவல் தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

கணனியானது கல்வித்துறையில் பயன்படுத்தப்படும் முக்கிய உபகரணமாக மாறியுள்ளது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் பார்க்கக் கூடியதாக இருப்பது இதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இப்போது ஆரம்பக்கல்வி தொடக்கம் இடைநிலைக் கல்வி வரையான அநேக பாடங்கள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைச் சிரமமின்றி மீண்டும் மீண்டும் செயற்படுத்தக் கூடியதாக இருப்பதும் இந்நிகழ்ச்சித் திட்டங்கல் பல்லூடகத் தொழினுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருப்பதும் சிறப்பம்சமாக அமைந்துள்ளது. தொலைக்கல்வியானது பிரபல்யமான கல்வி முறையாக அமைந்துள்ள இக்காலக்கட்டத்தில் அதற்கு கணனி மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் ஆகியவற்றால் பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. மரபு ரீதியான வகுப்பறைக் கல்வி மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான மாணவர்களுக்கு மட்டுமே கல்வியை வழங்கக் கூடியதாக உள்ளது.

ஆனால் கணனி மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் ஆகியவற்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் கல்விமுறை மூலமாக ஒரே தடவையில் ஏராளமான மாணவர்களுக்கு கல்வியை அளிக்கக் கூடியதாக உள்ளமை சிறப்பான அம்சம் ஆகும். தற்போது இலத்திரனியல் கற்கை முறைமை தொடர்பான உட்கட்டமைப்பு வசதி பற்றி இலங்கையில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழகங்கள் இதற்கு முன்னோடியாகச் செயற்படுகின்றன. எதிர்காலத்தில் இம்முறைமை பாடசாலைத் தொகுதி வரை விரிவடையக்கூடிய வாய்ப்பு உள்ளது. பாடசாலை நடவடிக்கைகளை தவிர பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்கும் கணனி பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலமாக கல்வித் துறையில் வினைத்திறனை அதிகரிக்க முடியும்.

தற்போது நிதித்திறையில் பாரியளவில் கணனி மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றமையை காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங்களின் கிளைகள் பிரதான அலுவலகத்துடன் வலைமுறையின் ஊடாக தொடர்புபடுத்தப்பட்டிருப்பதனால் எந்தவொரு வங்கிக் கிளையில் இருந்தும் நாம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. தன்னியக்க காசளிப்பு இயந்திரங்கள் மூலம் பல்வேறு வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளதால் வங்கி வாடிக்கையாளர் தமது நடவடிக்கைகளை தன்னியக்க காசளிப்பு இயந்திரங்கள் மூலம் இலகுவில் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

வங்கிக்குச் செல்லாது தமது வங்கிக் கணக்குச் சார்ந்த நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு பல்வேறு வகைப்பட்ட வசதிகள் வாடிக்கையாளர்களுக்கு வங்கிகளால் செய்து கொடுக்கப்படுகின்றன. இணையத்தைப் பயன்படுத்தி சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் கூட இலகுவாக கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது.

கணனித் தொழில்நுட்பம், தொடர்பாடல் தொழினுட்பம் ஆகிய இரண்டும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவை ஆகும். ஆகவே, தற்போது கணனி இன்றி தொடர்பாடல் துறை பற்றி கதைக்கவே இயலாத நிலைமை ஏற்பட்டு உள்ளது. இணையம் மூலமாக நாடுகளுக்கு இடையிலான தொலைவை குறைக்கக கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. செல்லிடத் தொலைபேசி இன்று அனைவராலும் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான உபகரணமாக மாறியுள்ளது. இதனால் உடனுக்குடன் பிறருடன் தொடர்பு கொள்ளக் கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

1960 இன் தசாப்தத்தின் இறுதி அரைவாசியில் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்பின் கீழ் இருந்த உயர் ஆய்வுச் செயற்றிட்ட முகவர் நிலையத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட கணனி வலையமைப்பு இணையத்தின் ஆரம்பம் ஆகும். பிரதேச ரீதியில் பரந்திருக்கும் பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வு நடைபெறும் நிறுவனங்களையும் கணனித் தொகுதிகளையும் ஒன்றோடொன்று எளிதாக தொடுத்தல் இந்த கணனி வலையமைப்பின் அடிப்படை நோக்கமாகும். மிகச் சிறிதாக ஆரம்பித்த இந்த வலையமப்பு வலை விருத்தியடைந்து இன்று பயன்படும் இணையமாக உருவாயிற்று. இன்று இணையத்தில் வரையறையின்றிக் கணனிகளை ஒன்றோடொன்று தொடுப்பதன் மூலம் உலகம் பூகோளக் கிராமமாக மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் நாம் இன்று பயன்படுத்தும் இணையத்திற்கு உரிமையாளரோ கட்டுப்படுத்துபவரோ கிடையாது. அரச சார்பற்ற சர்வதேச தொண்டர் நிறுவணங்கள் ஒன்று சேர்ந்து நிறுவியுள்ள இணையச் சங்கங்களின் மூலம் இணையத்திற்கு தேவையான நியம்ங்களையும் ஒழுக்கவியல் கோவைகளையும் தயாரித்தல், அவற்றைப் பின்பற்றுவதற்கு மனிதர்களை ஊக்க்குவித்தல் ஆகியன நடைபெறுகின்றன. இணையத்தை ஒழுக்கம் மிக்கதாகவும் முக்கிய தகவல் உள்ள இடமாகவும் மாற்றல் அவர்களுடைய நோக்கம் ஆகும்.

இணையத்துடன் இணைவதற்கு தேவையானவையாக கணனி, தொடர்பாடல் மென்பொருள், தொலைபன்னித் தொடுப்பு, மொடம் பொறி, இணையச் சேவையை வழங்கும் நிறுவனம் என்பன உள்ளன. ,இணையத் தளங்கள் வாயிலாக தகவல்களைப் பெறவும் மின் வர்த்தகம் செய்யவும் மின்னஞ்சல் வாயிலாக தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளலாம் என்ற நிலைகளை எல்லாம் தாண்டி மரணங்களும் சிலவேளை இணையத்தளங்கள் ஊடாக நிச்சயிக்கப்படுகின்றன. அமிரிக்க நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படுகின்ற இணையத்தளம் ஒன்று மரணச்சடங்குகளை தனது தளத்தின் ஊடாக ஒலி-ஒளி பரப்புச் செய்யப்படுகின்றது.

இணையத்தளங்களின் மூலம் பல அழிவுகரமான விஷயங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இணையத்தளத்தில் தீய அல்லது பார்க்கக் கூடாத் இணையப் பகுதிகளைப் பார்வையிடுவதன் மூலம் முற்று முழுதாக அவர்கள் அதற்கு அடிமைகளாகவே மாறி விடுகின்றனர். இதனால் அவர்களுடைய வாழ்ககையே திசைமாறிச் செல்கின்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக இன்றைய கால கட்டத்திலே மாணவர்களை அதிகமாக தன் பக்கம் தீய விஷயங்களுக்காக சுண்டி இழுக்கும் விஷயம் இணையத்தில் ஆங்காங்கே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு அவர்களுடைய சமூக் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையே திசை மாறிச் செல்கின்ற ஒரு நிலைப்பாடு காணப்படுகின்றது எனலாம்.

தொலைக்காட்சி, வானொலி போன்ற பொதுவான ஊடகங்கள் தமது தொடர்பாடல் நடவடிக்கைளுக்காக கணனியையே பெரிதும் நம்பியுள்ளன. அச்சிடல் நடவடிக்கைகளிலும் கணனி மிக இன்றியமையாத சாதனமாக விளங்குகின்றது. அண்மைக்காலம் வரை புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றாவற்றின் வடிவமைக்க பல மாதங்கள் தேவைப்பட்ட போதும் இப்போது சில நாட்களில் அவற்றை நிகழ்ச்சிகளும் ஒளி பரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் கணனியின் துணையுடன் தயாரிக்கப்பட்டவை ஆகும்.

பாதுகாப்புத் துறையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாயன்பாடு உயர் மட்டத்தில் உள்ளது. ஏவுகணை வழிப்படுத்தல் தொடக்கம் அணுக்கரு உலைகளை இயக்குதல் போன்ற மிகச் சிக்கலானதும் ஆபத்தானதுமான நடவடிக்கைகளுக்காகவும் இன்று கணனி பயன்படுத்தப்படுகின்றது. புலனாய்வுத் தகவல்களை சேகரித்தல் மற்றும் தகவல் பகுப்பாய்வு ஆகியவற்றுக்கு கணனி மிக இன்றியமையாதது ஆகும்.

அத்துடன் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதையும் இலகுவாக்குகின்றது.

அத்துடன் கட்டட நிர்மாணத்துறையில் கணனி பயன்படுத்தப்படுவதனால் சிறந்த தோற்றம் கொண்டதும் உறுதியானதுமான கட்டடங்களை அமைக்கக் கூடிய வசதி இப்போது ஏற்பட்டுள்ளது. கட்டட சட்டக அமைப்பின் முதல் கட்டடத்தின் இறுதித் தோற்றம் வரையான சகல சந்தர்ப்பங்களிலும் கணனி பயன்படுத்தப்படுகின்றது. கணனியின் உதவியுடன் சூழல் நேயம் மிக்க கட்டட நிர்மாணப் பொருட்கள் இப்போது அதிகள்வில் தயாரிக்கப்படுகின்றன. குறைந்த செலவில் கட்டட அமைப்பைப் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளமை கணனியின் மற்றொரு பயன் ஆகும். அவ்வாறே நகர நிர்மாண நடவடிக்கைகளுக்கும் கணனி சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலான ஒழுங்கமைக்கப்பட்ட நகரங்களை அமைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது சுகாதாரத் துறையிலும் கணனி அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. பல்வேறு வகைப்பட்ட பகுப்பாய்வு இயந்திரங்கள் விசேஷ பரிசோதனைகளுக்கெனப் பயன்படுத்தப்படும்

BUY - SELL - WHOLESALE - LEASING

CHANDRAN
(Ganesh Murugesu)

905-472-7464

தமிழர்கள் மத்தியில் பெருமையை பெற்ற நிறுவனம்

MG Motors
347 Main Street, Markham, ON. L3P 1Z2
Tel: 416-616-4054 fax: 905-472-9897
Email: info@mgmotors.ca Web: mgmotors.ca

இயந்திரங்கள் வைத்தியசாலைகளில் இன்றியமையாத சாதனங்களாக மாறிவிட்டன. கணனியின் துணையுடன் தொழிற்படுகின்ற கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதனால் இவற்றைப் பயன்படுத்தி துல்லியமாக நோய் நிர்ணயத்தைச் செய்ய முடிவதனால் சுகாதாரத் துறையினால் தரமானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையை மக்களுக்கு அளிக்க மிடிகின்றது. வைத்திய நிபுணர்களை தொடர்பு கொள்ளக் கூடிய வசதிகள் மட்டுமன்றி தொலை அறுவைச் சிகிச்சை முறைக்கும் இன்று கணனி பாரிய பங்களிப்பச் செய்கின்றது.

குடிவரவு, குடியகல்வி திணைக்களம், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் திணைக்களம் போன்றவை தமது அன்றாட நடவடிக்கைகளை கணனி மயப்படுத்தியுள்ளன. விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளில் கணனிகள் இன்றி எதுவுமே செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. விமானப் போக்குவரத்து கட்டுப்பாடு, விமான அனுமதிச் சீட்டு விநியோகம், ஆவன ஒதுக்கீடு ஆகிய நடவடிக்கைகளுக்கென இன்று கணனிகள் பயன்படுத்தப்படுகின்றன.

பொதுவாக மனித வாழ்க்கையில் விளையாட்டுக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை பொழுதுபோக்காக அமைவதுடன் அறிவைப் பெருக்கக் கூடியதாகவும் உள்ளன. இன்று கணனியுடன் இணைந்த பல்வேறு துணைச் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதனால் அது ஒரு விளையாட்டுச் சாதனமாகவும் மாறியுள்ளது. இக் கணனி விளையாட்டுக்கள் பல்வேறு வயதுத் தொகுதியினருக்கும் பொருந்தக் கூடிய விதமாகவும் பல்வேறு அறிவு மற்றும் ஆற்றல் மட்டங்களுக்கு ஏற்றதாகவும் அமைக்கப்பட்டுள்ளதலால் தத்தம் விருப்பத்திற்கு அமைய இவற்றை பயன்படுத்தக் கூடியதாக இருப்பதும் இதன் சிறப்பம்சமாகும். இவ் விளையாட்டுக்களுள் சதுரங்கம் பிரதானமானதாகும். இவ்வாறான விளையாட்டுக்கள் மூலமாக நுண்ணறிவு விருத்தி ஏற்படுவதுடன் விரைவாகத் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய ஆற்றலும் வளர்கின்றது. மேலும் ஆக்கத்திறன் மேம்பாட்டுக்கும் இவை உதவுகின்றன. கணிதம், விஞ்ஞானம் தொழினுட்பம் மட்டுமன்றி சித்திரம், மொழி, சங்கீதம் ஆகியன தொடர்பான அறிவைப் பெருக்கிக் கொள்ளக் கூடியதும் ஆக்கத்திறன் விருத்திக்கு உதவுவதுமான விளையாட்டுக்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் உடற்களைப்பு, உளத்தகைப்பு ஆகியவற்றைக் குறைப்பதற்குமான ஊடகமாகவும் இது விளங்குகின்றது. அத்துடன் பிள்ளைகள் கணனி விளையாட்டுக்களுக்கு அடிமையாதல், சூதாட்டம் போன்றவற்றுக்கு பழக்கப்படல் ஆகியன இதன் தீய விளைவுகள் ஆகும்.

இவ்வாறு இன்றைய விஞ்ஞான யுகத்திலே கணனியானது பல்வேறு துறைகளிலே பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. கணனியினை பயன்படுத்தி தீயவற்றை நீக்கி நல்லவற்றை பெற்று உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ள இதனைப் பயன்படுத்திக் கொள்வோமாக!

BY:செல்வி. பவிதா நடனபாதம்

யா/ அத்தியார் இந்துக்கல்லூரி
நீர்வேலி

1 SJ AUTO

151 Nuntucket BLVD. Unit 11 Scarborugh ON (Kennedy/Munham)

Garage: 416 755 0010 - Cell: 647 281 7500

உங்கள் சகல தேவைகளையும் நிறைவு செய்ய

"Your One Stop Service Center"

Full Service Shop

Foreign • Domestic

All Makes & Models

• Engines • Air Conditioning • Transmissions
• Radiators • Batteries • Brakes • Tune-Ups
• Clutches • Computer Diagnostics

